**FQD**

Register No. | | | | | | | |

4959–21

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

**B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five - year Regular Course)

Second Year – Third Semester

**LAW OF CONTRACTS — I**

Time : Three hours

Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding Six pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Describe the doctrine of frustration with decided cases.
ஒப்பந்த நிலைக் குலைவு கோட்பாட்டினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விவரி.

2. Define Consideration. What are the essentials for a valid consideration?
மறுபயன் என்பதை வரையறு. செல்லத்தக்க மறுபயனின் கூறுகள் யாவை? விளக்குக.

3. Define Misrepresentation and distinguish it from Fraud.
திரித்து காட்டுதலை வரையறை செய்து அதை மோசடியிலிருந்து வேறுபடுத்துக.

4. Explain the conditions and circumstances in which declaratory decrees may be obtained.
விளம்பு வகை தீர்ப்பாணை எந்த சூழ்நிலைகளில் நிபந்தனைகளுக்கு இணங்கி பெற இயலும் என்பதை எடுத்து கூறுக.

5. What are the various modes of discharge of contract with relevant provisions?
ஓர் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் பல்வேறு வழிமுறைகளை சட்ட பிரிவுகளுடன் விளக்கவும்.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each:
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Coercion and duress
வலுக்கட்டாயமும் உடற் கட்டாயமும்

(b) Quasi contracts
ஒப்பந்த போல்வுகள்

(c) Public policy
பொதுக் கொள்கை

(d) Minor's agreement
இளவர் உடன்பாடு

(e) Quantum meruit
பணித்தகு தொகை

(f) Contingent contract
நிகழ்வு சார் ஒப்பந்தம்

(g) Preventive relief
தடுப்பு தீர்வழி

(h) Rectification
திருத்தியமைத்தல்

(i) Voidable contract
தவிர்தகு ஒப்பந்தம்

(j) Invitation to treat.
முனைவிற்கான அழைப்பு.

**PART C** — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' who was a minor, by misrepresenting that he was a major, borrowed Rs. 5,000 from 'B', A failed to repay the amount. Can 'B' recover the money from 'A'. Decide.
'அ' எனும் இளவர் தான் உரிமை வயதையடைந்தவர் என திரித்துக் கூறி, 'ஆ'விடமிருந்து ரூ. 5000 கடன் வாங்கினார். 'அ' அத்தொகையை திருப்பிக் கொடுக்க தவறி விட்டார். 'அ' விடமிருந்து 'ஆ' பணத்தை திரும்ப பெற முடியுமா தீர்மானிக்கவும்.

8. 'A' sells by auction to 'B' a horse which 'A' knows to be unsound. 'A' says nothing to 'B' about the horse's health. Is the contract valid.
'அ' என்பவர் தன் குதிரை நலம் குன்றியது என்று தெரிந்து இருந்தும் அதனை 'ஆ' என்பவருக்கு ஏல வாயிலாக விற்கிறார். 'அ' தன் குதிரை நலம் குன்றியது என்பதை குறித்து 'ஆ' விடம் எதுவும் கூறவில்லை. இந்த ஒப்பந்தம் செல்லுமா?

9. A issued a pamphlet offering to pay Rs. 20,000 to any one who finds his missing son. B finds the missing son of 'A' and brought to him with out knowledge of the pamphlet. Can B claim the reward.
காணாமற்போன தன்னுடைய மகனை யார் கண்டுபிடித்து கொண்டு வந்தாலும் அவருக்கு ரூ. 20,000 வெகுமதியாக வழங்குவதாக 'A' என்பவர் ஒரு துண்டறிவிப்பு வெளியிடுகிறார். B என்பவர் அந்த துண்டறிவிப்பினை அறியாமல் 'A' யின் மகனை கண்டுபிடித்து 'A' யிடம் ஒப்படைத்தார். B அந்த வெகுமதியை கோர முடியுமா.

10. 'A' agrees with 'B' to discover treasure by magic. But 'A' failed, B filed a suit against 'A' for specific performance. Decide.
மந்திரத்தால் புதையல் ஒன்றை கண்டுபிடித்து தருவதாக 'A' என்பவர் 'B' என்பவரிடம் ஒப்பந்தம் செய்கிறார். 'A' தன் முயற்சியில் தோல்வியடைகிறார். 'B' என்பவர் A என்பவரை எதிர்த்து குறித்த வகை நிறைவேற்றம் கோரி வழக்கு தொடர்கிறார். தீர்மானிக்கவும்.

11. 'A' sends an offer to 'B' by post. 'B' posts his letter of acceptance, but subsequently he sends a telegram revoking his acceptance. Is there any enforceable contract between 'A' and 'B'.
'அ' அஞ்சல் வழியாக 'ஆ' விற்கு ஒரு முனைவை அனுப்பினார். 'ஆ' அந்த முனைவின் ஏற்பு கடிதத்தை அஞ்சல் பெட்டியில் இட்டுச் சென்றார். ஆனால் பின்னர் தந்தி வாயிலாக ஏற்பின் மறுப்பை அனுப்பினார். 'அ' க்கும் 'ஆ' க்கும் இடையே நிறைவேற்றக் கூடிய ஒப்பந்தம் ஏதேனும் இருக்கிறதா?

12. 'A' a tradesman, left certain goods at 'B's' house by mistake. 'B' treated the goods as his own. Can 'A' recover the price of the goods from 'B'?
'அ' என்ற வணிகர் சில பொருட்களை தவறுதலாக 'ஆ' என்பவருடைய வீட்டில் விட்டுச் சென்றார். அப்பொருட்களை தன் சொந்த பயன்பாட்டிற்கு 'ஆ' என்பவர் பயன்படுத்துகிறார். 'ஆ' என்பவரிடமிருந்து அப்பொருட்களுக்கான விலையை 'அ' என்பவர் பெற முடியுமா?

---